## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## Ang Mo Kio Tamil Methodist Church

**23rd ஜூன் / June 2024 ஞா யிறு ஆராதனை**
**Witness and Evangelism Sunday**

| | |
|---|---|
| ✝ **ஆராதனைக்கு அழைப்பு**<br>Call to Worship | **திருமதி இவாஞ்சலின் திவ்யா**<br>Mrs. Evangeline Divya |
| **இறைவணக்கப்பாடல்**<br>Introit | **பாடகர் குழு**<br>Choir |
| **ஜெபம்**<br>Prayer | **திருமதி இவாஞ்சலின் திவ்யா**<br>Mrs. Evangeline Divya |
| **தொடக்க பாடல்**<br>✝ Opening Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### நல்ல செய்தி, இயேசுவை

*1. நல்ல செய்தி, இயேசுவை*
*நோக்கிப்பார், ரட்சிப்பார்*
*நம்பி வந்த அவரை*
*நோக்கிப்பார், ரட்சிப்பார்*
*எந்தப்பாவியாயினும்*
*தள்ளமாட்டேன் என்கிறார்*
*துரோகஞ் செய்தபோதிலும்*
*நோக்கிப்பார், ரட்சிப்பார்*

*2. எங்கும் செய்தி சொல்லுவோம்*
*நோக்கிப்பார் ரட்சிப்பார்*
*தேசா தேசம் கூறுவோம்*
*நோக்கிப்பார், ரட்சிப்பார்*
*எந்த நாடு தீவிலும்*
*இயேசு காத்து நிற்கிறார்*
*மூடன் நீசன் ஆகிலும்*
*நோக்கிப்பார், ரட்சிப்பார்.*

*3. இன்னும் கேள், மா நேசராம்*
*இயேசுவே காக்கிறார்*
*நம்பும் பக்தரையெல்லாம்*
*காக்கிறார், காக்கிறார்*
*சற்றும் தவறாமலும்*
*கையில் ஏந்திக்கொள்ளுவார்*
*கேடுபாடில்லாமலும்*
*காக்கிறார், காக்கிறார்.*

*4. சுவிசேஷம் இதுவே*
*காக்கிறார், காக்கிறார்*
*பாவம் நீக்கிப் பின்னுமே*
*காக்கிறார், காக்கிறார்*
*மோட்சஞ் சேருமளவும்*
*தாங்கிக்கொண்டே இருப்பார்*
*தீமையைச் செய்யாமலும்*
*காக்கிறார், காக்கிறார்.*

| | |
|---|---|
| **மாறி வாசித்தல் *25*ம் ஞாயிறு**<br>✝ “சங்கீதம் 73”<br>“தேவன் நல்லவராகவே இருக்கிறார்”<br>Psalter Reading – “Psalm 73” | **சபையார் இணைந்து**<br>Congregation |
| ✝ **தந்தை போற்றி**<br>Gloria Patri | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **துதி ஆராதனை**<br>Singspiration | |
| **தந்தையருக்கான சிறப்பு ஜெபம்**<br>Prayer for Father’s | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்**<br>Thanksgiving & Pastoral Prayer | **மறைதிரு. விஜய் ஜோஸப்**<br>Rev. Vijay Joseph |
| **பரமண்டல ஜெபம்**<br>Lord’s Prayer | **சபையார் இணைந்து**<br>Congregation |
| **சிறப்புப் பாடல்**<br>Special Song | **பாடகர் குழு**<br>Choir |
| ✝ **காணிக்கைப் பாடல்**<br>Offertory Song | **சபையார் இணைந்து**<br>Congregation |

### விளைந்த பலனை அறுப்பாரில்லை

**விளைந்த பலனை அறுப்பாரில்லை**
**விளைவின் நற்பலன் வாடிடுதே**
**அறுவடை மிகுதி ஆளோ இல்லை**
**அந்தோ! மனிதர் அழிகின்றாரே**

*1. அவர் போல் பேசிட நாவு இல்லை*
*அவர் போல் அலைந்திட கால்கள் இல்லை*
*எண்ணிலடங்கா மாந்தர் சத்தம்*
*உந்தன் செவியினில் தொனிக்கல்லையோ*

*2. ஆத்தும இரட்சண்டம் அடையாதவர்*
*ஆயிரமாயிரம் அழிகிறாரே*
*திறப்பின் வாசவில் நிற்பவர் யார்?*
*தினமும் அவர் குரல் கேட்கல்லையோ*

*3. ஆத்தும தரிசனம் கண்டிடுவாய்.*
*ஆண்டவர் வாக்கினை ஏற்றிடுவாய்*
*விரைந்து சென்று சேவை செய்வாய்*
*விளைவின் பலனை அறிந்திடுவாய்.*

*4. ஒருமனம் ஒற்றுமை ஏக சிந்தை*
*சபைதனில் விளங்கிட செயல்படுவாய்*
*நிமிர்த்து நிற்கும் தூண்களைப் போல்*

*நிலைவரமாய் என்றும் தாங்கி நிற்பாய்*

*5. ஆவியின் வரங்கள் ஒன்பதனை*
*ஆவலுடன் நீயும் பெற்றிடுவாய்*
*சபையின் நன்மைக்காய் உபயோகிப்பாய்*
*சந்ததம் சபையிவில் நிலைத்திருப்பாய்*

*6. தேவனின் சேவையில் பொறுப்பெடுப்பாய்*
*உந்தனின் பங்கிளை ஏற்றிடுவாய்*
*கர்த்தர் நாட்டின தோட்டத்திலே*
*கடைசிவரை நீயும் கனி கொடுப்பாய்*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **திரு.கோவிந்தராஜு**
Scripture Reading — Mr.Govindaraju
***அப்போஸ்தலர் 13 : 47 - 49***
Acts 13 : 47 - 49

**அருளுரை** — **திரு. ஜேசுதாஸ் சார்லஸ்**
Sermon — Ps. Jesudoss Charles

✝ **அர்ப்பணகீதம்** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

**<u>தந்தேன் என்னை யேசுவே</u>**

**தந்தேன் என்னை யேசுவே,**
**இந்த நேரமே உமக்கே.**

**உந்தனுக்கே ஊழியஞ்செய்யத்**
**தந்தேன் என்னைத் தாங்கியருளும்!**

*1. ஜீவகாலம் முழுதும்*
*தேவபணி செய்திடுவேன்,*
*பூவில் கடும் போர் புரிகையில்*
*காவும்! உந்தன் கரத்தினில் வைத்து,*

*2. உலகோர் என்னை நெருக்கிப்*
*பலமாய் யுத்தம் செய்திடினும்,*
*நலமாய்ச் சர்வ ஆயுதம் பூண்டு*
*நானிலத்தினில் நாதா*
*வெல்லுவேன்.*

*3. உந்தன் சித்தமே செய்வேன்,*
*என்றன் சித்தம் ஒழித்திடுவேன்,*
*எந்த இடம் எனக்குக் காட்டினும்,*
*யேசுவே, அங்கே இதோ!*
*போகிறேன்.*

*4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்,*
*துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்,*
*அஷ்டதிக்கும் ஆளும் தேவனே*
*அடியேன் உம்மில்*
*அமரச்செய்திடும்!*

*5. ஒன்றுமில்லை நான் ஐயா!*
*உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்;*
*அன்று சீஷர்களித்த ஆவியால்*
*இன்றே அடியேனை நிரப்பும்!*

**அறிவிப்புகள்**
Announcements

Witness & Evangelism Presentation

✝ <u>மனப்பாட வசனங்கள் / Weekly Memory Verses</u>

மனப்பாட வசனங்கள் — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation
***அப்போஸ்தலர் 13 : 47***
Acts 13 : 47

***47. நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ Indicates Congregation standing